பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

22 01 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

- பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அரசின் விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்கு சிறப்பான பலன் கிடைத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- உணவுப்பதப்படுத்துதல் துறையில் புதிய முதலீடுகளை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

- இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து, குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது

- கர்நாடகாவில் இன்று இருவேறு இடங்களில் நேரிட்ட சாலை விபத்துகளில் 14 பேர் உயிரிழந்தனர்.

- இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ----*

<<<<<<>>>>>

பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அரசின் விழிப்புணர்வு பிரச்சாரங்களுக்கு சிறப்பான பலன் கிடைத்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
பெண் குழந்தைகளை பாதுகாப்போம் - பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்போம் திட்டம் பத்தாண்டுகளை நிறைவு செய்துள்ளதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பெருமளவிலான மக்கள் பங்கேற்ற இத்திட்டமானது மிகப்பெரிய மாற்றங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியிருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

பாலின சமத்துவத்தை களைவதிலும் பெண் குழந்தைகளின் கல்வி குறித்த கனவுகளுக்கு ஏற்ற வாய்ப்புகளை உருவாக்கித்தரும் வகையிலும், இது அமைந்து வருவதாக திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

குறைவான பெண் குழந்தைகள் விகிதம் உள்ள மாவட்டங்களில் இத்திட்டமானது குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தில் பங்கேற்ற அனைத்து மக்கள் மற்றும் அமைப்புகளுக்கு நன்றி தெரிவித்துள்ள பிரதமர், நாட்டு மக்கள் அனைவரும் பெண் குழந்தைகளின் உரிமைகளை காக்கும், அவர்களது கல்வியை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

பெண் குழந்தைகளை பாதுகாப்போம் - பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்போம் திட்டத்தின் சிறப்புகளை எடுத்துக்கூறும் வகையில், மகளிர் மற்றம் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதேபோன்று அனைத்து மாநிலங்களிலும், மாவட்ட அளவில் பல்வேறு நிகழச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

ரயில்வே பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் பராமரிப்பு முறைகள் குறித்து ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், ஸ்விட்சர்லாந்தில் அந்நாட்டு ரயில்வே உயரதிகாரிகள் குழுவினருடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில், நவீன பாதுகாப்பு தொழில்நுட்பங்கள், பராமரிப்பு நடைமுறைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

முன்னதாக, செயின்ட் **Margrethen**-ல் உள்ள ரயில் பெட்டி உற்பத்தி தொழிற்சாலையை திரு அஷ்வினி வைஷ்ணவ் பார்வையிட்டார்.

<<<<<<>>>>>

உணவுப்பதப்படுத்துதல் துறையில் புதிய முதலீடுகளை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு சிராக் பாஸ்வான் கூறியுள்ளார்.

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில், உலக பொருளாதார மன்ற வருடாந்திர மாநாட்டில் பங்கேற்ற அவர், உணவுப்பதப்படுத்துதலில் பங்களித்து வரும் சர்வதேச நிறுவன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவின் உட்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>

இந்தோ – பசிபிக் பிராந்தியத்தில் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவது குறித்து குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சா் திரு மாா்க்கோ ரூபியோ தலைமையில், வாஷிங்டனில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் மற்றும் ஆஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில, இந்த பிராந்தியத்தில் அமைதி, நிலைத்தன்மை, கடல்சாா் பாதுகாப்பை நிலைநாட்டி மக்களின் முன்னேற்றத்திற்கு தொடா்ந்து பாடுபடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் நடைபெறவுள்ள குவாட் தலைவர்கள் உச்சிமாநாட்டில் பங்கேற்பதை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

சிந்து நதி ஒப்பந்தத்தின்கீழ், ஜம்மு காஷ்மீரில் இரண்டு நீர்மின் நிலையத் திட்டங்கள் அமைப்பது தொடர்பாக, இந்தியா – பாகிஸ்தான் இடையிலான கருத்து வேறுபாடுகளை களையும் வகையில், நடுநிலை நிபுணர் ஒருவரை உலக வங்கி நியமித்துள்ளது.

இதற்கு இந்தியா வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் கிஷன் கங்கா, **‘Ratle,** நீர்மின் திட்டங்கள் தொடர்பான வேறுபாடுகளை களைய நடுநிலை நிபுணரால் மட்டுமே முடியும் என்று இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இந்த நீர்மின் திட்டங்கள் வடிவமைப்பு குறித்து விவாதிக்க நடுவர் மன்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற பாகிஸ்தானின் கோரிக்கையை நிராகரிப்பதாக நடுநிலை நிபுணர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டங்கள் தொடர்பான வேறுபாடுகளை கவனமாக ஆராய்ந்து அறிந்து உரிய தீர்வு காணப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

இரண்டு நாள் பயணமாக சிவகங்கை மாவட்டத்திற்கு சென்றுள்ள தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், இன்று சுதந்திரப் போராட்ட வீரர்களான மருது சகோதரர்கள் சிலை அமைக்க அடிக்கல் நாட்டினார்.

அம்மாவட்டத்தில் அமையவுள்ள புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய அவர், முடிவுற்ற திட்டப்பணிகளையும் தொடங்கிவைத்தார்.

மேலும், சுதந்திரப்போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் சிலையை திரு மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்

<<<<<<>>>>>

இடைத்தேர்தல் நடைபெறும் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி தேர்தல் அதிகாரியாக பணியாற்றி வந்த திரு மணிஷ் மாற்றப்பட்டு, ஒசூர் மாநகராட்சி ஆணையர் திரு ஸ்ரீகாந்த் புதிய தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதையடுத்து, இன்று திரு ஸ்ரீகாந்த் பொறுப்பேற்றுக்கொண்டார்.

<<<<<<>>>>>

விருதுநகர் மாவட்டம் விஜயகரிசல் குளத்தில் நடைபெற்று வரும் மூன்றாவது கட்ட அகழாய்வில் சுமார் 3 ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது, சுடுமண் குடுவை, நுட்பமான முறையில் அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கமலக்கண்ணன் - 32 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

கர்நாடகாவில் இன்று இருவேறு இடங்களில் நேரிட்ட சாலை விபத்துகளில் 14 பேர் உயிரிழந்தனர். 25 பேர் காயமடைந்தனர்.

உத்தரகன்னடா மாவட்டத்தில் எல்லப்பூ தாலுகாவில் காய்கறி ஏற்றிச்சென்ற கனரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானதில் பத்து பேர் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்களுக்கு ஹூப்ளி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

ராய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள சிந்தனூரில் நேரிட்ட மற்றொரு சாலை விபத்தில், நான்கு பேர் உயிரிழந்தனர். பத்து பேர் காயமடைந்தனர்.

நான்கு சக்கர வாகனம் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து நிலை தடுமாறியதால் இவ்விபத்து ஏற்பட்டதாகவும், இது குறித்து விசாரணை மேற்கொண்டுவருவதாகவும் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் உள்ள பாதல் கிராமத்தில் மர்மமான முறையில் கடந்த ஒன்றரை மாத காலத்தில் 17 பேர் உயிரிழந்ததையடுத்து, அப்பகுதியை கட்டுப்படுத்தப்பட்ட மண்டலமாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

பாதிப்புக்கு உள்ளானவர்களின் வீடுகள் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும், அப்பகுதியில் பொதுமக்கள் கூடுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மேலும், இந்த உயிரிழப்புகள் குறித்து சிறப்பு விசாரணைக்குழு தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

துருக்கியின் வடமேற்கு பகுதியில் நேரிட்ட தீ விபத்தில் 76 பேர் உயிரிழந்தனர். 51 பேர் காயமடைந்தனர்.

அந்நாட்டின் வடமேற்கு பகுதியான **'Kartalkaya'**-வில் உள்ள 12 அடுக்குமாடி ஹோட்டல் ஒன்றில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து, அதன் அருகே உள்ள தங்கும் இடங்களில் இருந்து மக்கள் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மேலும் ஆறு நிபுணர்களை கொண்ட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் துருக்கி அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் துருவ் கபிலா – தனிஷா கிராஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஜகார்த்தாவில் இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-18, 21-14 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Adnan Maulana – Sari jamil** இணையை வென்றது.

<<<<<<>>>>>

மாற்றுத்திறனாளிகளுக்கான கிரிக்கெட் சாம்பியன் போட்டியில் கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட் அணியினருக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி இந்தியா இந்த கோப்பையை கைப்பற்றியது.

<<<<<<>>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியின் மகளிர் பிரிவில் பெங்கால் - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

ஆடவர் பிரிவில் தில்லி — சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

ரூர்கேலாவில் இப்போட்டி இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று கொல்கத்தாவில் நடைபெறுகிறது.

<<<<<<END>>>>>